விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 புரட்டாதி 10 ஜுலைஹ் 8 இதழ் 225
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 26—9—82

நவம்பரில்

## கொழும்பு-தூத்துக்குடி கப்பல் சேவை

[கொழும்பு]

கொழும்புக்கும் தூத்துக்குடிக்குமிடையில் தனியார் கப்பல்சேவையொன்று வரும் நவம்பர் மாதத்தில் ஆரம்பமாகவிருக்கிறது. இலங்கை நிறுவனமொன்று இக்கப்பல் சேவையைநடாத்தும். கிரேக்க கப்பல் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது 622பேர்களுடன் 120 கார்களையும் இக்கப்பலில் ஏற்றிச்செல்ல வசதியுள்ளது. [இ]

விசேட மலிவு விற்பனை!
அகலம் குறைக்கப்பட்ட
[மஸ்கன்ஸ்] அஸ்பெஸ்டஸ்
கூரைத்தகடுகள்
12' X 3' — 10' X 3'
8' X 3' — 6' X 3'
தொடர்புகள்:
ஆனந்தி அன் கே
கே. கே. எஸ். வீதி, மல்லாக
[துர்க்காதேவி
ஆலயத்திற்கு அருகாமையில்
4385

# பட்டதாரிகளை உருவாக்கும் தொழிற்சாலையாக பல்கலைக் கழகம் இருக்கக்கூடாது!

## இந்திரா மருமகள் இயக்கத்தில் மூவர் கைது

புதுடில்லி, செப் 25

இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் மருமகள் திருமதி மேனகா காந்தியின் அரசியல்இயக்கத்தைச்சேர்ந்த மூன்று பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்திராவின் மகன் சஞ்சேய்காந்தி விமானவிபத்தில் இறந்தபின்னர், அவரது மகனின் மனைவி மேனகாதன்னை வாரிசாக ஏற்றுக் கொள்ளவில்லை என்ற மனஸ்தாபத்துடன் புதிய இயக்கத்தை ஆரம்பித்திருந்தார்.

## யாழ். பட்டமளிப்பு விழாவில் அண்ணுமலை துணைவேந்தர் பேருரை

(யாழ்ப்பாணம்)

"குறுக்குவழிகளிலும், தவருனமுறைகளிலும், அறிவுணர்வில்லாத உத்திகளிலும் ஈடுபடுகின்ற காரணத்தால், இக்காலத்தில், கல்வியானது கேலிக்குரிய நிலையில் தாழ்ந்துள்ளது. எனவே, சமுதாயத்திற்கேற்றவண்ணம் கல்விஅமைந்திடப் போதனையின் தரத்தை உயர்த்த வேண்டும். அத்தற்குரியவகையில் பல்கலைக்கழகக் கல்வியானது வாழ்க்கையுடனும் சமுதாயத்துடனும் தொடர்புடையதாக இருத்தல்வேண்டும்; போதிய தரமில்லாத வகையிலே பட்டதாரிகளை உருவாக்கும் ஒருவகைத்தொழிற்சாலையாகப் பல்கலைக் கழகம் அமைதல் கூடாது" என்று நேற்று நடந்த யாழ். பல்கலைக்கழக மூன்ருவது பட்டமளிப்பு விழாவில் பட்டமளிப்புப் பேருரை நிகழ்த்திய அண்ணுமலைப்பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எஸ். வி. சிட்டிபாபு குறிப்பிட்டார்.

சிறந்த இதயமும், சரியான மனமும், உண்மையான நம்பிக்கையும் ஆர்வமான செயல்திறமுங்கொண்ட ஆசிரியர் எவரோ அவரே நல்லாசிரியராவார். பதவிப்பித்திஞல் வீழ்த்தப்படாத அவரே சிறந்த செஞ்சுடையவராவார்" என்றும் அவர் தமது நீண்டஉரையில் குறிப்பிட்டார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுப் பிற்பகல் யாழ். பல்கலைக்க வேந்தரும் ஓய்வு பெற்ற நீதியரசருமான திரு. வி. மாணிக்க வாசகர் தலைமையில் இப்பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

### 463 புதிய பட்டதாரிகள்

பட்டமளிப்பு விழா ஆரம்பமாவதற்கு முன்பு 463 புதிய பட்டதாரிகள் மூன்று குழுக்களாகப் பிரிந்து விழாவுக்கான சம்பிரதாய உடை அணிந்து ஊர்வலமாக யாழ் திறந்த வெளியரங்கிலிருந்து வந்தனர் இவர்களைத்தொடர்ந்து பேராசிரியர்களும், யாழ். பல்கலைக் கழ உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனும் ஆலவட்டம், குடையுடன் பல்கலைக்கழக வேந்தர் திரு. வி. மாணிக்கவாசகரும் ஊர்வலத்தில் வந்து கொண்டிருந்தனர். ராமநாதன் நுண்கலை கல்லூரியினரும் இப்பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டனர்.

யாழ் வீரசிங்கம் மண்டபத்தை ஊர்வலம் வந்தடைந்ததும் மங்கல வாத்தியம் முழங்கியது சமீபத்தில் ஜனதி

(8-ம் பக்கம் பார்க்க)

## ரயில் பிரயாணிகளுக்கு இந்தத்தொல்லை இனி இல்லை!

(யாழ்ப்பாணம்)

ரயில்களின் உள்ளேயும், ரயில் நிலையங்களிலும் இளநீர், சோடா போன்றவற்றை விற்பனை செய்வோரின் தொல்லைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

வவனியா ரயில் நிலையத்தில் நடைபெற்ற மகாநாடொன்றில் யாழ் எம்.பி திரு வெ யோகேஸ்வரன் கேட்டுக் கொண்ட கோரிக்கையைத் தொடர்ந்து, இத்தொல்லைகள் இனிமேல் இருக்கமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை நடைபெற்ற கொழும்பு - யாழ் ரயில் கொள்ளை சம்பந்தமாக வவனியா ரயில் நிலையத்தில்நேற்று பாதுகாப்பு மகாநாடொன்று நடைபெற்றது.

இம்மகாநாட்டில் போக்குவரத்து அமைச்சின் சிரேஷ்ட செயலாளர் திருமதி வயலற் பெர்ணண்டோ தலைமையில் போக்குவரத்துப் பகுதி அதிகாரிகள் கொழும்பு பிரிவு பொலிஸ் அதிபர், உதவிப் பொலிஸ் அதிபர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

[மா]

## 'அமிர்' மகன் பகீரதன் விடுதலைசெய்யப்பட்டார்!

சென்னை செப். 25

சென்னையில் பொலிஸரால் கைது செய்யப்பட்ட இலங்கை எதிர்க்கட்சித்தலைவர் திரு.அ அமிர்தலிங்கத்தின் மகன் பகீரதன் உட்பட ஆறு இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டனர்

இவ்விளைஞர்கள் சென்னை சேப்பாக்கம்; சிதம்பரம், விளையாட்டரங்கில் இலங்கைக் கிரிக்கெட் அணிக்கும் இந்திய கிரிக்கெட் அணிக்குமிடையே நடைபெற்ற டெஸ்ட்பந்தயத்தைப்பார்வையிடச் செல்ல வேண்டமென கோரி துண்டுப்பிரசுரங்களை விநியோகித்ததற்காக கடந்த வாரம் கைதாகினர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இவ்விளைஞர்கள் இலங்கையுடனான டெஸ்ட் பந்தயம் முடிவடைந்ததும் விடுதலைசெய்யப்படுவதற்கென ஏர்கனவே சென்னைப் பொலிஸார் அறிவித்திருந்தனர்.

[கி இ]

## இஸ்ரேலுக்கு தடை!

ஹனேய் செப். 25

வீயன்னுவில் நடைபெற்று வரும் சர்வதேச அணுசக்தி கூட்டத்தில் கலந்து கொள்ள இஸ்ரேலுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

## ★ஜனதிபதியின் வடபகுதிதேர்தல்பிரசாரம்: கூட்டங்கள் நடக்குமிடங்களில் தற்காலிக பொலிஸ்பிரிவுகள்

(யாழ்ப்பாணம்)

ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன வடபகுதியில் தேர்தல் பிரசாரக்கூட்டங்களில் கலந்து கொண்டுஉரையாற்றும் இடங்களில் தற்காலிக பொலிஸ் பிரிவுகள் அமைப்பது குறித்து நேற்று காங்கேசன்துறையில் நடைபெற்ற பொலிஸ், இராணுவ, விமானப்படைத்தளபதிகள் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

ஜனதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவின் வடபகுதி விஜயத்தை யொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்வதற்கு உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகள் குழு ஒன்று நேற்றுக்காலை வடபகுதிக்கு வந்து சேர்ந்தது.

பொலிஸ்மா அதிபர் திரு உருத்திரா இராஜசிங்கம், பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. எஸ். சுந்தரலிங்கம், இரகசியப் பிரதி பொலிஸ்மா அதிபர்திரு. ஹேபட் வீரசிங்க, மற்றும் முப்படை அதிகாரிகள், வடபகுதி பொலிஸ் அதிபர்கள், உதவி அதிபர்கள், பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் கூடி பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை நடத்தினர்.

ஜனதிபதி, அக்டோபர் 2ம் திகதி மாலை யாழ் திறந்தவெளியரங்கிலும், 3ம் திகதிமுறையே புங்குடுதீவு மத்திய மகாவித்தி

(8ம் பக்கம் பார்க்க)

தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல மோட்டார் உதிரிப்பாக விற்பனை நிலையமொன்றிற்கு கடிதப் போக்குவரத்து கணக்கு முதலியவற்றைக் கவனிப்பதற்கு அனுபவமும் ஆற்றலும் மிக்க ஒருவர் தேவை. ஆங்கில அறிவும் 'டைப்' அடிப்பதில் தேர்ச்சியும் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
விண்ணப்பம் முடிவு திகதி 5 – 10 – 82
விண்ணப்பிக்க:

விளம்பர இல: 4667
C/o ஈழநாடு,
யாழ்ப்பாணம்.
4667

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

...தியடி புது வீதியில் No: ...½ பரப்பு காணி பழைய ...டுடன் விற்பனைக்கு ...ண்டு. தொடர்பு கொள்ள ...ம் சரையப்பா புதுச் செம் மணி ரோட்டு சந்தி பருத்தித் துறை வீதி, யாழ்ப்பாணம் 4631

சாவகச்சேரி புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் 2½ பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சூசைப்பிள்ளை 98, வேம்படி ரோட், யாழ்ப்பாணம். 4651

நல்லூர் வடக்கு – கல்வியங்காட்டில் பிரதான வீதிக்கருகாமையில் இரண்டு பரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 93/21, இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர் மடம். 4640

புனரமைக்கப்பெற்ற C. 90, C. 50, C. 70 மோட்டார் சைக்கிள்களும் DELICA வான்களும் விற்பனைக்குண்டு. மற்றும் எந்தவிதமான வாகனங்களும் குறைந்த விலையில் ஆடருக்கு நேரடியாகத் தருவித்துக் கொடுப்போம். நா. சாம்பசிவம் அன் கோ. 54 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். 4563

மானிப்பாய் சோதி வேம்படி ஒழுங்கையில் பிரதான வீதியிலிருந்து 250 யார் தூரத்தில் 4 பரப்புக்காணியில் புதிதாக சகல வசதிகளுடன் அமைக்கப்பட்ட விசாலமான வீடு ஒன்று விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்க: விளம்பர இல: 4637 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 4637

நீர்வேலியில் மெயின் ரோட்டில் தோட்டம் செய்யவும், வீடு கட்டவும் சொந்தக்காணிகள் 3½, 6, 8 பரப்பு விற்பனைக்குண்டு. க. மாணிக்கவாசகர், நீர்வேலி மத்தி. 4601

யாழ்ப்பாணத்திலிருந்து 3மைல் தொலைவில் ஆறுபரப்பு காணி வீடுகட்ட உகந்தது. விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: ந. கதிர்காமத்தம்பி, கோவிலடி, திருக்கேதீஸ்வரம். 4604

சுண்டிக்குளியில் புது மாடி வீடொன்று உடன் விற்பனைக்குண்டு 3000 ச அடி கொண்டது. விண்ணப்பிக்கவும், விளம்பர இல: 4627, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 4627

யாழ்ப்பாணம், பழைய பூங்கா வீதி, பரி. யோவான் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அருகாமையில் 1½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். பா. கிருஷ்ண பிள்ளை, மரக்காலை, அச்சுவேலி, வடக்கு, அச்சுவேலி 4639

கோப்பாய் – இராச வீதிக்கு அருகாமையில் பத்து பரப்பு தோட்டக்காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: நா. பொன்னுத்துரை, சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு. 4641

சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் 7½ பரப்புக் குடியிருப்பதற்குரியகாணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: A. சிவகுரு, தேவாலய வீதி, சாவகச்சேரி 4654

## விற்பனைக்கு

புதிய National Vedio Casette Recorder Model N V 340 VHS ஒக்ரோபர் முதற் கிழமையில் விற்பனைக்குண்டு. முகவரி; சி. வைத்திலிங்கம், மடாலயவீதி, ஏழாலை மேற்கு, சுண்ணாகம். 4656

நல்லநிலையில் சொந்தப் பாவிப்பிலுள்ள இந்தியன் (பஜாய்) ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். பி. எம். சர்மா, 'துளசி', சிவன்கோவில் வீதி, சாவகச்சேரி. 4657

சுன்னாகம் – புத்தூர் வீதியில் நெற்சந்தைப்படுத்தல்சபைக்கு அருகாமையில் தோட்டம் செய்வதற்குரிய 16 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. சிவஞானம், காங்கேசன்துறை வீதி, மருதனார் மடம், சுன்னாகம். 662

Akikido Sterio கசெற் டெக்கும் 'Grundig 26' கலர் ரி.வி. யும். உடன் விற்பனைக்குண்டு. P. கனகசபை, 'வடலித் தோட்டம்', மானிப்பாய் வடக்கு. 4658

1150 கிலோ மீட்டர் பாவிக்கப்பட்டதும் 86 ஸ்ரீ 5532 இலக்கமுடையதும் 2 பேருடன் முழுக்காப்புறுதி செய்யப்பட்டதுமான RX 115 மொடல் 'யமகா' மோட்டோர் சயிக்கிள் விலைக்கு உள்ளது 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் "சிலோன் மேர்சன்ற்" ஸ்தாபனத்தில் நேரில் பார்வையிடலாம். விலை ரூபா 21,500/- விரங்கட்கு கீழ்வரும் விலாசத்தில் தொடர்பு கொள்ளலாம். 35/8, சிவகுருநாதர்வீதி. யாழ்ப்பாணம். 4623

## தேவை

ஆர்வமுள்ள இளைஞர் யுவதிகள் யாழ்ப்பாணம் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் அபிவிருத்திக்கு பல்லாண்டு பணிபுரிய சிறந்த எதிர்காலம். தொடர்பு: வி. வி. எஸ். தெல்லிப்பழை. 4649

தேவன்ஸ் சீயாக்காய் பவுடர் பற்பொடி பைக்கற் செய்வதற்கு பெண்பிள்ளைகள் தேவை. தங்கி வேலைசெய்வதற்கு இடவசதியுண்டு. தேவன்ஸ், 159/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 4647

மணமகள் தேவை:– வெளிநாட்டில் சிவில் பொறியிலாளராக கடமையாற்றும் இந்து வேளாள மணமகனுக்கு விஞ்ஞான பட்டதாரி அல்லது கணக்காளர் பதவி வகிக்கும் 25–30க்கு இடைப்பட்ட வயதுடைய மணமகள் தேவை. சகல விபரங்களுடனும் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 4621 மே/பா ஈழநாடு. யாழ்ப்பாணம். 4621

ரூபா 1000 – வைப்புப்பணம் செலுத்தக்கூடிய ஆங்கில, கணித தகுதியுடையவிவாகமாகாத இளைஞர் நகரில் உள்ள ஹோட்டல் ஒன்றிற்கு காசாளராகத் தேவை. பில் போடுபவர்கட்கும் இடம் உண்டு நற்சான்றிதழ்களுடன் திங்கட்கிழமை பகல் 10 மணிக்கு மேல் நேரில் வரவும் 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம 4638

## தேவை

மட்டக்களப்பு வாழைச்சேனையிலுள்ள வயல், தென்னந்தோட்டம் ஆகியவற்றை மேற்பார்வை செய்வதற்கு அனுபவமுள்ள மேற்பார்வையாளர்கள் தேவை. (இளைப்பாறிய விவசாயஉத்தியோகஸ்தர் விரும்பத்தக்கது) குடும்பத்துடன் வசிப்பதற்கு இடவசதியுண்டு. சம்பளம் பற்றிய விபரங்கள் நேரில். கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். S.K. கணேசநாதன், காடி தோட்டம், கிரான். 4552

உழவு யந்திரம் ஓட்டுவதில் அனுபவமுள்ள டிரைவர்கள் தேவை. விபரங்களுக்கு: S. K. கணேசநாதன், காடி தோட்டம், கிரான். 4550

பெற்றோல் நிரப்பும் நிலையத்தை மேற்பார்வை செய்வதற்கு அனுபவமும் ஆங்கில அறிவும் உள்ளவர்கள் தேவை. விபரங்களுக்கு: S. K. கணேசநாதன், காடி தோட்டம், கிரான். 4551

## தவறிவிட்டது

22–9–82 இரவு வீரசிங்கம் மண்டபத்தில் ஹொண்டா மோட்டோர் சைக்கிளின் (185 மொடல்) கறுப்பு நிற பக்க கவர், இன்சூரன்ஸ், லைசென்ஸ் என்பவற்றுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவுசெய்து இ. தயாபரன் 248/4, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். 4663

## பயிற்சி

ஒரு மாத எலக்றிக்கல் வயரிங் 27–09–82 ஆரம்பமாகின்றது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 9/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 4630

## வகுப்பு

உயர் வகுப்பு மாணவர்களுக்கும் உத்தியோகம் பார்ப்பவர்களுக்கும் தனிப்பட்ட முறையில் ஆங்கிலம் கற்பிக்கப்படும் எம். குலேந்திரன், கெனடி ஒழுங்கை, திருநெல்வேலி கிழக்கு. 4655

யாழ்ப்பாண அக்கடமி
க. பொ. த.
உயர்தர பரீட்சை
ஆகஸ்ட் 1983

### மீட்டல் வகுப்புகள்

க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு ஒருமுறையாவது தோற்றிய எவரும் இந்த மீட்டல் வகுப்புகளில் சேரலாம். சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் உள்ள விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்கவும்.

வகுப்புகள் 13–9–82ல் ஆரம்பமாகின்றன.

அதிபர்,

தொலைபேசி எண்: 617
376, பிரதான வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். 4426

யா/இணுவில்
சைவப்பிரகாச மகாவித்தியாலயம்

A/L 1983/84க்குரிய கலை/வர்த்தக வகுப்புகளில் புதிதாக சேர விரும்புவோர் விபரங்களுடன் 01–10–82 (வெள்ளி)க்கு முன் பாடசாலைக்கு நேரில் வரவும்.

(4644) அதிபர்.

ஒட்டோஸ் லிமிட்டெட்

## ரயர் விற்பனை

சகல வாகனங்களுக்கும் (ஸ்கூட்டர் உட்பட) தேவையான ரயர், ரியூப்புகள் கைவசம் விற்பனைக்கு உண்டு. உங்கள் தேவைக்கு தொடர்பு கொள்ளவும்.

ஒட்டோஸ் லிமிட்டெட்,
190, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(4636) தொலைபேசி: 22496

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, பொற்பதி ரோட்டில் 6½ பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.

அ. வாமதேவன்,
"மதுரவாசா",
பொற்பதி ரோட்,
[4664] கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

## விளம்பரம்

எங்களிடம் நைலோன் நூல் எல்லா இழைகளும் கலந்து விற்பனைக்குண்டு. கொள்வனவு செய்ய விரும்புவோர் பொருட்களை எங்கள் களஞ்சியத்தில் பார்வையிட்டு, உங்கள் உத்தேச விலையை இம்மாதம் 30–ந் திகதிக்கு முன் எமக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

வர்த்தக அதிகாரி,
ஈ-நோர் அபிவிருத்தி நிறுவனம்,
குருநகர், யாழ்ப்பாணம்.
(4626)

## வெற்றிடங்கள்

சாவகச்சேரியில்
புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும்
ஸ்தாபனம்ஒன்றுக்கு பின்வரும் பதவிகளுக்கு
ஆட்கள் தேவை

1. விற்பனையாளர்கள்:- 2
வயது: 20 — 35க்குமிடையில்
2. காசாளர் (பெண்) 1
வயது: 20 — 30க்குமிடையில்
தகைமை: தட்டெழுத்துப் பயிற்சியும், க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி
3. தொழில் நுட்பவியலாளர்:-
(i) றேடியோ:- 2 ii) ரி. வி:- 2
அனுபவமுள்ளோர் விண்ணப்பிக்கவும்
4. வீடியோ கமராமென்:- 1
நல்ல அனுபவமும், திறமையும் உள்ளோர் விண்ணப்பிக்கவும்.
5. கணக்காளர்:- 1
55 வயதிற்குட்பட்டோரும் முன் அனுபவம் உடையோரும் விண்ணப்பிக்கவும்.
6. பயிலுனர்கள்:-
ரி. வி. றேடியோ தொழில்நுட்பவியலாளர்கள்
வயது:- 18 — 25க்கிடையில்
தகைமை:- க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் 2 விஞ்ஞான பாடங்கள் உட்பட 6 பாடங்களில் சித்தி.

10-10-82க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பிக்க:
விளம்பர இல: 4624,
மே/பா ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம்.
(4624)

## Electricians For Factory

Vacancies exist for Electricians capable of handling factory wiring installations and maintenance and repair of motors and other electrical equipment. Preference will be given to those who have successfully followed training courses at the B. T. T. I. Kotelawalapura, Junior Technical Schools or equivalent institutions.

## Driver

Require experienced Driver with Car and Van licence with experience of running repairs. Must be well guaranteed.

Apply in own handwriting to P. O. Box No 1199, Colombo, with details of bio data, salary required and names of two Referees. 4592

## லெபனன் மக்களை பாதுகாக்க

# பிரெஞ்சுத் துருப்புக்கள் பெய்ரூட் சென்றன

பெய்ரூட், செப். 25

**பெய்ரூட்டிலுள்ள இரு அகதிகள் முகாம்களில் இடம்பெற்ற படுகொலையையடுத்து லெபனன் மக்களுக்குப் பாதுகாப்பளிப்பதற்காக பிரெஞ்சுத் துருப்புக்கள் பெய்ரூட் போய்ச் சேர்ந்துள்ளன.**

பெய்ரூட் அகதிகள் முகாம்களில் இஸ்ரேலினால் மேற்கொள்ளப்பட்ட படுகொலையையடுத்து அங்கு பிரெஞ்சு, இத்தாலிய, அமெரிக்கத் துருப்புக்களை அனுப்பிவைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அமெரிக்க, இத்தாலியத் துருப்புக்கள் நாளை பெய்ரூட் செல்லுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

பெய்ரூட் அகதிகள் முகாமில் 36 மணித்தியாலங்களாக படுகொலைகள் இடம்பெற்ற போதும், அது தொடர்பாக இஸ்ரேலியத் தலைவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென்று வாஷிங்டன் பத்திரிகையொன்று கண்டித்துள்ளது.

இஸ்ரேலிய அதிகாரிகள் அகதிகள் முகாமில் படுகொலை செய்யப்பட்ட மக்களைக் காப்பாற்றவில்லையென்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

இச்சம்பவம் பற்றி வெள்ளிக்கிழமைகாலை தான் தமக்கு தகவல் கிடைத்ததாக இஸ்ரேலிய அமைச்சர் ஷரோன் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இது தொடர்பாக விசாரணைசெய்ய இத்தாலிய அரசாங்கம் சிரேஷ்ட நீதிபதியொருவரை நியமித்துள்ளது.

கடந்தவாரம் மேற்கு பெய்ரூட்டிலுள்ள இரு அகதிகள் முகாம்களில் சுமார் 1400 பாலஸ்தீனியர்கள் இஸ்ரேலியத் துருப்புக்களினால் படுகொலைசெய்யப்பட்டது தெரிந்ததே. [வெ]

## லெபனன் புதிய ஜனாதிபதி பதவியேற்பு

பெய்ரூட், செப். 25

லெபனனின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட அமீன் கமாயல் நேற்றுப் பதவியேற்றார்.

இவர் பதவியேற்றவுடன் லெபனன் பிரதமமந்திரியின் ராஜினாமாவை ஏற்றுக்கொண்டார்.

புதிய பிரதமமந்திரியை நியமிக்கும்வரை அவரைப் பதவியிலிருக்குமாறும் கேட்டுக்கொண்டார், [வெ]

## மெக்காவில் ஈரானிய யாத்திரீகர் பொலிசார் கைகலப்பு!

### பலர் காயம்!

தெஹ்ரான். செப். 25

மெக்காவில் ஈரானிய யாத்திரிகர்களுடன் சவுதி அரேபிய பொலிசார் நேற்று கைகலப்பில் இறங்கியபோது பலர் காயமடைந்தனர். இச்சம்பவம் தொடர்பாக ஈரானியத் தலைவர் அயத்துல்லா கொமேனியின் முக்கிய ஆதரவாளரும் மற்றும் 150 ஈரானியரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மெக்கா நகரின் பள்ளிவாசலில் ஈரானியர்கள் கூட்டமொன்றை நடக்தமுயற்சித்தபோது சவுதி அரேபிய பொலிசார் கண்ணீர்ப்புகை குண்டுகளைவீசி, குண்டாந்தடிப்பிரயோகஞ் செய்ததாக கூறப்படுகிறது.

மெக்கா புனித நகரில்நடந்த இச்சம்பவத்தில் பலர் காயமடைந்துள்ளதாகதெஹ்ரான் வானொலி அறிவித்துள்ளது.

நான்கு நாள் நடைபெறும் யாத்திரையில் முதலாவது தினமான நேற்று இச்சம்பவம் நடந்துள்ளது. (க)

## அமிதாப்பச்சன்குணமடைந்து வீடுதிரும்பினார்

புதுடில்லி, செப். 25

பிரபல ஹிந்தி திரைப்பட நடிகர் அமிதாப்பச்சன் 2மாத காலசிகிச்சைக்கு பின்னர்மருத்துவ மனையிலிருந்து தமது இல்லத்திற்கு சென்றார்.

அவர் ஆஸ்பத்திரியிலிருந்து புறப்பட்டபோது வெளியில திரண்டு நின்ற நூற்றுக்கணக்

(7-ம் பக்கம் பார்க்க)

## பாலஸ்தீனியர் படுகொலை: விசாரணை செய்ய இஸ்ரேலிய நீதிபதி மறுப்பு

டெல்அவிவ், செப். 25

கடந்தவாரம் மேற்கு பெய்ரூட்டிலுள்ள இரு அகதிகள் முகாம்களில் வைத்து சுமார் 1400 பாலஸ்தீனியர்கள் இஸ்ரேலியப் படைவீரர்களினால் படுகொலை செய்யப்பட்டது குறித்து விசாரணை செய்ய முடியாதென்று இஸ்ரேலிய உயர்நீதிமன்ற நீதிபதி தெரிவித்துள்ளார்.

இப்படுகொலை பற்றி விசாரணை செய்ய இஸ்ரேலிய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிட்டியின் தலைவராக இந்நீதிபதி இடம்பெற்றிருந்தார்.

தனது இம்முடிவை நீதிபதி இஸ்ரேலிய அமைச்சரவைக்கு தெரிவித்துள்ளார். [வெ]

## பெரியகுளம் லோக சபா இடைத்தேர்தல் இன்று

[சென்னை]

பெரியகுளம் லோகசபா இடைத்தேர்தல் இன்று நடைபெறவுள்ளது. இத்தேர்தலில் அ. தி. மு. க., தி. மு. க., இந்திராகாங்கிரஸ் ஆகிய கட்சிகளின் வேட்பாளர்கள் உட்பட 25பேர் போட்டியிடுகின்றனர்.

இத்தொகுதியில் 7 இலட்சத்து 75,627 வாக்காளர்கள் உள்ளனர். வாக்குகளை எண்ணி முடிக்க 24 மணித்தியாலம் செல்லுமெனவும் கூறப்பட்டது.

இவ் இடைத்தேர்தலை ஒட்டி இங்கு 3,000 பொலிசார் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களில் 150 பேர் பெண் பொலிசாராவர். 600 தேர்தல் உத்தியோகத்தர்கள் வாக்குகளை எண்ணும் பணியில் ஈடுபடவுள்ளனர். [வெ]

## வட இந்தியாவில் வெள்ளப் பெருக்கு 1,000 பேர் பலி!

புதுடில்லி செப் 25

வட இந்தியாவில் கடந்த நூற்றாண்டு காலத்தில் இல்லாதவாறு ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கில் ஆயிரத்திற்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்!

உத்திரபிரதேசம் ஒரிஸா, அஸாம், பீஹார் ஆகிய பகுதிகளில் ஆயிரக்கணக்கான கிராமங்கள் நீருள் மூழ்கியுள்ளன. லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாகியுள்ளனர்.

உத்தரபிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் 31,000 கிராமங்கள் வெள்ளத்தால் அள்ளப்பட்டுள்ளன. 50 லட்சம் மக்கள் வீடுகளை இழந்துள்ளனர். (க

MASTERS 25/82

யாழ்ப்பாண வாசிகளே!

சரியான பாதையில் காலடி எடுத்து வையுங்கள்.

செல்லவேண்டிய இடம்

மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்

கிளை நிலையம்

11/8, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி:- 321

நிதி, வாடகைக் கொள்வனவு, ஆயுள், ஏனைய காப்புறுதிகளுக்கு ஆலோசனையும் ஆதரவும் அளிப்பவர்கள்.

தேசிய காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தின் பிரதான முகவர்கள்.

இலங்கையின் பிரபலிய நிதி நிறுவனம் உங்களுக்கு உதவக் காத்திருக்கிறது.

# ஜனாதிபதி தேர்தல் முதற்கணிப்பில் வெற்றியை நிச்சயிப்பது கடினம்!

''வாக்காளர்களால் போடப்படும் செல்லுபடி வாக்குகளில் அரைவாசிக்கு மதிகமான வாக்குகளை ஒரு வேட்பாளர் பெறுவாராஞல்'' அவர் ஜனதிபதி பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டுவிட்டதாக தேர்தல் ஆணையாளர் அறிவிப்பார் என ஜனதிபதி தேர்தல் சட்டம் கூறுகின்றது.

மூன்று பேருக்கு மேல் களத்தில் நிற்கும் சந்தர்ப்பத்திலும் எந்த ஒரு வேட்பாளரும் மேற்கூறியவாறு வாக்குகளைப் பெருதவிடத்தும் ஒவ்வொரு வாக்காளருக்கும் ஒரு நேரடி வாக்கும் இரண்டு மறைமுக வாக்குகளும் இருக்கும் என்பதையே இது குறிக்கின்றது. ஆனல் இரண்டாவது – மூன்றுவது விருப்ப வாக்குகளை சட்டாயம் அளிக்கவேண்டுமென்று சட்டம் வலியுறுத்தவில்லை.

வாக்குச்சீட்டில் காணப்படும் சின்னம்– அதற்குரிய வேட்பாளர்களுக்கு எதிராகவுள்ள கட்டத்தில் '1' என்று குறிப்பிட்டு வாக்குச்சீட்டைப் போட்டுவிட்டு வாக்காளர் வெளியேற வேண்டும். விரும்பினல் தாம் விரும்பும் ஏனைய வேட்பாளர்களுக்கு எதிராக 2, 3 ஆகிய இலக்கங்களை வாக்குச் சீட்டில் பதியலாம்.

இலங்கை முழுவதுமாக 80 லட்சத்து 10 ஆயிரம் வாக்காளர்கள் வாக்களிக்கத்தகுதி பெற்றிருக்கிறார்கள். இவர்களில் 87 . 3 வீதமானவர்கள் வாக்களிப்பார்களாஞல் இதில் 30லட்சத்து50ஆயிரம் வாக்குகள் அரைவாசியாக கருதப்படலாம். வாக்களிப்பில் கலந்து கொள்ளவேண்டாமென்றதமிழ் கூட்டணி வேண்டுகோளுக்குத் தமிழ்மக்கள் செவிசாய்த்தால் இந்த எண்ணிக்கை மேலும் குறையும்.

இறுதிக்கணிப்பு என்னவாக இருந்தபோதிலும் வெற்றிபெறும் வாக்காளர் இரண்டாவது விருப்ப வாக்கையும் கணக்கெடுத்தபின்பே தீர்மானிக்கப்படுவார் என்பது எனது கணிப்பீடு. அதாவது எந்த ஒரு வேட்பாளரும் 50 வீதம் முதல் விருப்ப வாக்குகளைப் பெறமாட்டார் என்பது என் கருத்து.

1977–ல் ஐ. தே. கட்சி 3,148,651 வாக்குகளைப் பெற்றது.

நாடு முழுவதும் போடப்பட்ட வாக்குகளின் 50.9 வீதமாகும் இது. இலங்கை தேர்தல் சரித்திரத்தில் முன் எப்போதும் இல்லாத ஒரு சாதனை. ஆனல் அன்று நாட்டில் இருந்த அரசியல் பொருளாதார நிலைமை இன்றைய நிலைமைக்கு வெகுதூரம் மாறுபட்டது.

அன்று யு. என். பி. மிகவும் செல்வாக்கு பெற்றிருந்தது. இன்றைய கேள்வி என்னவென்றால் 1977–ம் ஆண்டு யு. என். பி. வாரிவழங்கிய வாக்குறுதிகளின் மீது பெற்ற வாக்குப் பலத்தைப்போல இன்று அதே செல்வாக்கு நிலவுகின்றதா என்பதே.

ஒரு கட்சியின் செல்வாக்கை கூட்டங்களுக்கு வரும் மக்கள் தொகையைக்கொண்டு கணிப்பதிலும்சங்கிடமிருக்கிறது1966 தேர்தலின்போது மகாஜனஎக்சத்பெரமுனேயின்தலைவர் திரு. பிலிப் குணவர்த்தன நடத்திய கூட்டங்களுக்கு பெருமளவில் மக்கள் திரண்டு

**காமினி நவரட்ண**

வந்தனர்கள். ஆனல் இறுதியில் என்ன நடந்தது.

பதவியிலிருக்கும் கட்சிகளின் கூட்டங்களுக்கு மக்கள் கூடுவது இயற்கை

1981–ம் மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில் பல இடங்களிலும் ஐ. தே. கட்சி பதவிக்கு வந்த போதிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை பகிஷ்கரிப்புக்கு அழைப்பு விடுத்ததை நாம் மறந்துவிட முடியாது.

1977ல் யு. என். பி. பதிவான வாக்குகளில் 46 வீதத்தைப் பெற்றது மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தலில் பதிவான வாக்குகளில் 31 வீதமாகக்குறைந்து விட்டது. இது 16 மாதங்களுக்கு முன்னர் இப்போது யு. என் பி. யின் செல்வாக்கு கூடியிருக்கிறதா குறைந்திருக்கிறதா?

குறைந்திருக்கிறது என்பது தான் பதிலாஞல்– பதவியிலிருந்த எந்தக் கட்சிக்கும் இறுதிக்காலத்தில் இந்த நிலைமை தான் ஏற்பட்டிருக்கிறது— ஜனதிபதித்தேர்தலில்51வீதத்துக்குமேல் வாக்குகளைப் பெறுவது கடினம்.

எனது கணிப்பீடுகளின் படி யு என். பி. பெறக்கூடிய வாக்கு எண்ணிக்கையின் தொகை குறையவே செய்யும், அதே சமயம் சிறிலங்கா சுதந்திரக்கட்சி, சமசமாஜக் கட்சிகளின்வாக்குஎண்ணிக்கை ஜே. வி. பி.க்கு பெருமளவில் சாய்ந்தாலன்றி அதிகரிக்கவே செய்யும்.

இந்த இருகட்சிகளும் பொது வாக்காளர் விடயத்தில் ஒத்துப்போகாவிட்டாலும் இரண்டாம் மூன்ரும் விருப்ப வாக்குகளை இக்கட்சிகளின் ஆதரவாளர்கள் ஒன்றுக்கொன்று மாற்றிப் போடுவார்கள் என்ற கருத்தும் நிலவுகின்றது. மேலும் எதிர்க்கட்சி வேட்பாளர் ஒருவருக்கு வாக்களிப்பவர் இரண்டாம் விருப்ப வாக்கை யு என். பி. க்கு போடுவார் என்று எதிர்பார்க்க முடியாது.

முதல் வாக்குகளில் ஒருவரும் வெற்றிபெருத நிலையில் இரண்டாம் விருப்பவாக்குகளை கணக்கெடுக்கும்போது போட்டியிலிருந்து ஒதுக்கப்படும் எதிர்வேட்பாளரின் வாக்குகளில் இரண்டாம் விருப்பவாக்குகள் ஐக்கிய தேசியக்கட்சிக்கு அதிகம் இருக்கும் என்று கருதமுடியாது.

இந்த நிலைமை உருவாகக்கூடும் என்று யூ என். பி, மேலிடம் ஆராய்ந்ததாகவும் தெரிகின்றது. ஜனதிபதித் தேர்தல் சட்டத்தை உருவாக்கியபோது அவர்கள் இதை உணர்ந்திருக்கவில்லை.

---

★ யாழ். இந்துவில் 'முத்தாக'த் திகழ்ந்த

# மாணவர்கள் 'ஹீரோ' தேவன் மாஸ்டர்!



'பல்லுடைக்கும் தமிழ்' என்று பண்டிதத் தமிழில் எழுதியவரை சஞ்சிகையில் சாடியதால், அருமையான ஆசிரியர் ஒருவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்குக் கிடைத்தார்!

உரும்பிராய் இந்துக்கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த அவர் தான், அங்கு ஆண்டுக்கு ஒரு முறை வெளியாகும் கல்லூரி சஞ்சிகையின் வெளியீட்டாசிரியர்.

அதே பாடசாலையில் கல்வி பயிற்றுவித்துக் கொண்டிருந்த இன்னொரு ஆசிரியர் எழுதிய ஆக்கத்தை, வெளியீட்டாசிரியர் குறிம்பில், வாய்க்குள் நுழையாத அவர் தமிழ் நடையை கிண்டல்' செய்துவிட்டதால், அது விரோதமாக வளர்ந்து, வேருெரு பாடசாலைக்கு அவர் போக வேண்டிய நிலையை ஏற்படுத்தியது.

திறமைக்கு முதலிடம் அளிக்கும் அப்போதைய யாழ் இந்து அதிபர் திரு. வி. மு. ஆசைப்பிள்ளை அவரைத் தம்முடன் அணைத்துக் கொண்டார்!

—'தேவன் மாஸ்டர்'என்று இன்று அன்பாக எல்லாராலும் அழைக்கப்படும் இளையப்பா மகாதேவா யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு இருபத்தாறு ஆண்டுகளுக்கு முன்னர் வந்து சேர்ந்த கதை இது தான்!

—O—

உடுவில் மான்ஸ் ஸ்கூலில் ஆசிரியர் ஒருவர் தேவை என்ற விளம்பரத்தைப் பார்த்து விண்ணப்பித்த போது 'தேவன் மாஸ்ட'ருக்குப் பத்தொன்பது வயது!

1944 ஆம் ஆண்டு ஜனவரி 31ந் திகதி இன்றும் தேவனுக்கு நினைவிலிருக்கிறது. அடுத்தநாள் முதலாந் திகதி அட்டமி என்பதால், இத்தினத்தில் ஆசிரியப் பதவி ஏற்றதை மனதில் வைத்திருக்கிருர். ஒன்பது ஆசிரியர்களுடன் பத்தாவது ஆசிரியராஞர்.

**ஈ. கே. ஆர்.**

இளைஞராக இருந்தாலும், லண்டன் மற்றிக்குலேஷன் சித்தி பெற்றவராக இருந்ததால், ஆசிரியத் தொழிலின் ஆரம்பமே அவருக்கு இனிப்பாகவே தோற்றியது!

அடுத்த மூன்ரே, நான்கு வருடத்தில், மஹரஹம ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**ஆசிரியகலாசாலை அனுபவங்கள்**

அங்கிருக்கிற காலத்தில் தேவனுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் சுவையானவை.

பயிற்சிக் கலாசாலை இறுதி ஆண்டில், பாடசாலையில் வகுப்பு எடுப்பதிலும் சித்தி பெறவேண்டும்.

ஒன்பதாம் வகுப்புக்கும் பாடமெடுத்துக் கொண்டிருந்தார் தேவன். அவர் பாடம் எடுப்பதைக் கவனித்துக் கொண்டிருந்தார் பொறுப்பான ஆசிரியர்.

அட்சர கணிதம்— மீதித் தோற்றம்.

கரும்பலகையில் சோக் கட்டியால், எழுதிஅழித்து, எழுதி அழித்து விளங்கப் படுத்தக் கொண்டிருந்தார்.

வகுப்பில் கெட்டிக்காரமாணவன் ஒருவன் இல்லாமலா போய் விடுவான்?

இப்போது சட்டத்தரணியாகத் திகழும் திரு. கே.வி எஸ் சண்முகநாதன், அப்போது அந்த வகுப்பில் அரைக்காற்சட்டைபோட்ட 'பொடியன்'.

திடீரென்று எழுத்து ஏதோ கேட்க, தான் எழுதியது பிழை என்பதை ஊகித்துக் கொண்ட தேவன், 'டஸ்ரால்' மிகவும் கெட்டித்தனமாக அழித்ததை நினைத்து இப்போதும் சிரிக்கிருர்.

இன்னொரு நாள்—

மஹரஹமவில் ஒரு பாடசாலையில் நடந்த நிகழ்ச்சி.

ஒன்பதாம் வகுப்பு மாணவர்களை முதல்நாளே சென்று சந்தித்து, 'அரைகுறை' யானவர்களையெல்லாம், தான் எடுக்கும் வகுப்புக்கு 'மட்டும்' போடச் செய்யவைத்து, மிஞ்சிய இருபத்திஞன்குபேரையும் தன் 'லிஸ்ட்டில்' எழுதிய ஒழுங்கின்படி அமரவைத்து ஏற்பாடுகளைச் செய்துவிட்டார் தேவன்!

வகுப்பை எப்படி நடத்துகிருர் என்பதைக் கவனிக்க வந்த ஆசிரியருக்குஒரேவியப்பு தேவன் எப்படிப் பெயர்களை இரண்டொரு நாட்களுக்குள்

(5ம் பக்கம் பார்க்க)

---

இன்று பண்டாரநாயக்க நினைவுதினம்

# முற்போக்குப் பாதைக்கு நாட்டை இட்டுச் சென்றவர்

உலகின் பல நாடுகளிலும் காலத்திற்கு காலம் பல பெரியார்கள் தோன்றி அந்நாடு சகல துறைகளிலும் முன்னேற அரும்பாடுபட்டு இருக்கின்ருர்கள்.

அதேபோன்று நம் ஈழத்திருநாடு அன்னிய ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டுக்கிடந்த போது பிறந்தவர் காலஞ்சென்ற பிரதமர் மாண்புமிகு எஸ் டபிள்யு ஆர் டி. பண்டாரநாயக்கா ஆவர். எமது நாடு விடுதலைபெற்று சுதந்திரமடைய காரண கர்த்தாக்களில் இவரும் ஒருவராவர்.

நாட்டுமக்களின் நலனுக்காக சோஷலிசப் புரட்சிமூலம் நாட்டை வளப்படுத்தி வந்த இவர் மக்களுக்காக தமது உயிரையே அர்ப்பணித்த பெருந்தகையாவர்.

1927ம் ஆண்டு கொழும்பு மாநகரசபை உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டார். 1931ல் டொனமூர் அரசியல் திட்டத்தின்கீழ் வியாங்கொடைத் தொகுதி உறுப்பினராகச் சட்ட சபைக்கு எதிர்ப்பின்றி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

1945ல் சட்டசபைத் தலைவராக்கபட்டார். சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் 1947ல் அத்தனகலத்தொகுதில்போட்டியிட்டு அமோக வெற்றியீட்டினர், இப்போது ஆட்சி பீடம் ஏறிய அமரர் டி எஸ். சேனநாயக்காவின்மந்திரிசபையில் சுகாதார அமைச்சராகவும், சபைத் தலைவராகவும் பணியாற்றினர். எனினும் தமது சோஷலிச முற்போக்

**ரி. விவேகராசா**

குக் கொள்கைகளை இவ்வாட்சியின்போது புகுத்த முடியாது மனம் கலக்கமடைந்த திரு. பண்டாரநாயக்கா 1951ம் ஆண்டு மந்திரிப்பதவியை உதறியெறிந்ததுடன் கட்சியிலிருந்து வெளியேறி எதிர்க் கட்சியில் அமர்ந்தார்.

இதன் பிரதிபலிப்பாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியை ஸ்தாபித்து அதன் தலைமைப் பதவியையும் பொறுப்பேற்று, 1956ம் ஆண்டு பொதுத்தேர்தலில் அதிகப்படியானஆசனங்

(8ம் பக்கம் பார்க்க)

நம்பிக்கையான நவநாகரிக தங்க வைர நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.
போன்:23199
தந்தி; வைரம்

## ★ ஜனாதிபதி தேர்தல்களம்

### ''பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்

# தமிழ் இளைஞர் மட்டும்தான்

### விசாரணை செய்யப்படுகின்றனர்''

### ஆனைக்கோட்டைக் கூட்டத்தில் குமார்

[யாழ்ப்பாணம்]

''பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்கள் மட்டும்தான் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்கள். ஆனால் தென் பகுதியில் நடைபெறும் சம்பவங்களில், எவரும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு விசாரணை செய்யப்படுவதில்லை. அவர்கள் வேறு சட்டத்தின் கீழ்தான் விசாரணை செய்யப்படுகின்றனர்''.

ஆனைக்கோட்டை பிடாரி அம்மன் கோவிலருகில் நடந்த ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி வேட்பாளர் திரு. குமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. பி. குமாராசாமி தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் திரு. குமார் பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:

பயங்கரவாத தடைச்சட்டம். நாடு முழுவதும் அமுலில் இருந்தாலும் தமிழ்இளைஞர்கள்மட்டும அச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்கள். இப்படியான நிலையில், நீங்கள் ஐக்கியதேசியக்கட்சியை ஆதரிக்க முடியுமா?

1977 பொதுத்தேர்தலுக்குப் பிறகு மிகவும் பாரதூரமான விதத்தில் தமிழ்பேசும்மக்கள் நடத்தப்பட்டு வருகின்றனர். இராணுவம் வடக்கு, கிழக்கில் நிரந்தரமாக தங்கியுள்ளது. தற்காலிகமாக கொண்டுவரப்பட்ட பயங்கரவாததடைச்சட்டம் நிரந்தரமாக்கப்பட்டுவிட்டது இப்பயங்கரவாதச்சட்டம் இலங்கை பூராவும் அமுலில் உள்ளது. ஆனால், வடக்கு கிழக்கில் ஏதாவது சம்பவங்கள் நடந்தால், உடனடியாக இச்சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்படுகிறார்கள். ஆனால் இதே போன்ற சம்பவங்கள் தென் பகுதியில் நடந்தால் அங்கு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் எவரும் கைது செய்யப்படுவதில்லை வேறு சட்டத்தின்கீழ் விசாரணை நடைபெறுகிறது. இப்படியான அநீதிகள் நடக்கின்றபடியால்தான் தமிழ் பேசும் மகன் எப்போதும் இல்லாதவாறு தமிழ் ஈழத்தைப் பெற ஆர்வம்கொண்டிருக்கிறான்.

திரு. ஆ.குமாரவேலு, திரு. முத்துமாணிக்கம், திரு. எஸ். எஸ். மனோகரன், திரு. ஆர். ஈ. ஆனந்தராசா ஆகியோரும் பேசினார்கள். (க)

# ''ஐ. தே. கட்சியை மீண்டும் ஆட்சிபீடமேற்றவேண்டும்''

### கிளிநொச்சி அமைப்பாளர் கூறுகிறார்

[கிளிநொச்சி]

இன்றைய அரசு கிளிநொச்சிப் பகுதியின் அபிவிருத்தியில் கூடுதல் அக்கறை எடுத்து வருகிறது. அரசின் அபிவிருத்தித் திட்டங்கள் இப் பகுதியில் பூரணமாக நிறைவேறவேண்டுமாயின் மீண்டும் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான அரசு ஆட்சிபீடமேறவேண்டும்.

கிளிநொச்சித் தொகுதி ஐக்கியதேசியக் கட்சியின் கிளைகளின் கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றுகையில் ஐக்கியதேசியக்கட்சி கிளிநொச்சி அமைப்பாளர் திரு. நாயகம் சிற்றம்பலம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. சிற்றம்பலம் மேலும் பேசுகையில், தமிழ்மக்களின் பிரச்னைக்கு நிரந்தர தீர்வை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவால் தான் ஏற்படுத்த முடியும். வடக்கு, தெற்கென்ற பேதமின்றி சகல இன மக்களும் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு ஏகோபித்த ஆதரவை வழங்கி வருகின்றனர்

நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் நாம் அனைவரும் ஐக்கியப்பட்டு மீண்டும் ஐக்கியதேசியக்கட்சியை ஆட்சி பீடமேற்றவேண்டும்.

கிளிநொச்சித் தொகுதி ஐக்கிய தேசியக் கட்சி செயலாளர் திரு. செ. வேலாயுதம் உட்பட பலர் உரையாற்றினார்கள். (க)

## வீட்டு யன்னல் உடைத்து 83,000 ரூபா கொள்ளை!

(மாவிட்டபுரம்)

வீட்டின் யன்னல்உடைக்கப்பட்டு 83 ஆயிரம் ரூபா பெறுமதியான நகை, பணம், மற்றும் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இளவாலை மாரீசன் கூடலில் கந்தப்பிள்ளை சோமசுந்தரம் என்பவரதுவீட்டில்இத்திருட்டு இடம் பெற்றுள்ளது

வீட்டுக்காரர் ஒரு அறையில் படுத்து ஆழ்ந்த நித்திரையிலிருக்கும் போது மற்றைய அறையின் யன்னலை உடைத்து உட்புகுந்த திருடர்கள் இக் கொள்ளையை நடத்திவிட்டு தலைமறைவாகிவிட்டனராம்.

இது பற்றி காங்கேசன்துறை பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்

### யாருடையது

[யாழ்ப்பாணம்]

யாழ். ஸ்ரான்லிவீதியில் கே. அருளானந்தம் என்பவரால் கண்டெடுக்கப்பட்ட திறப்புக் கோர்வையொன்று ''ஈழநாடு'' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளவும்,

தொலைக்காட்சி சேவையில் மீண்டும் தமிழ் திரைப்படங்கள் காண்பிக்கப்படுவதனால்

நீங்கள் சிக்கனமாகவும், தெளிவாகவும், வசதியாகவும் திரைப்படங்களைப் பார்ப்பதற்கு

சாப் (SHARP) கறுப்பு / வெள்ளை — வர்ண தொலைக்காட்சிப் பெட்டிகள்

ஹையோ ஸ்ரார் (HYO STAR) (No. 1 KOREAN T. V.)

கறுப்பு/வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டிகள்

வாங்கிப் பயனடையுங்கள்

வடபகுதி விநியோகஸ்தர்கள் :

ஈஸ்வர் கோப்பரேசன்

18, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

போன் : 23308

## யாழ். இந்துவில்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நினைவில் வைத்திருக்கிறார் என்று!

'குணபாலா' என்று முதுகைத் தட்டியதும், பெயருக்குரிய மாணவன் எழும்பிப் பதில் சொல்கிறானே!

சொல்லவும் வேண்டுமோ, தேவனுக்கு எத்தனைபுள்ளிகள் விழுந்திருக்குமென்று?

மாணவர்களின் பெயர்களை தனக்கு வசதியாக நிரைப்படுத்தி எழுதிய 'லிஸ்டை' பொறுப்பாசிரியர் பார்க்காமல் இருக்கவேண்டுமே. என்பதில் தேவன் கவனமாக இருந்தார்!

### பிறப்பா? சூழலா?

ஆசிரியகலாசாலையில்இருந்த போது, தேவனைத் திடீரெனக் குடையத்தொடங்கிய பெரியதொரு பிரச்னை: மனிதனை உருவாக்குவது பிறப்பா? சூழலா?

பயிற்சியின் போது படிப்பிக்காத உளநூல்களையெல்லாம் படித்ததினால் ஏற்பட்ட கேள்விதான் இது.

ஒரு குடும்பத்தின் மூன்று பரம்பரைகளை எடுத்து, 'கேட்டதும் நடந்ததும்' என்ற தலைப்பில் பெரிய நாவல் ஒன்றை எழுதினார். பிறப்பும், சூழலும் இணைந்துதான் மனிதனை உருவாக்கிறது என்று பதில் தந்தார். அத்தோடு எழுத்தாளர் தேவன்— யாழ்ப்பாணமும் பிறந்தார்!

இந்தியாவிலுள்ள 'சுதர்ஸன் வெளியீட்டாளர்கள்' இவரது 'வாடிய மலர்கள்' என்ற நாவலை வெளியிட்டதையும் நாம் குறிப்பிடலாம்!

இரண்டாம் மகாயுத்தம் நடந்து கொண்டிருந்த காலத்தில் நூல்களை வெளியிட வேண்டிய கட்டாயத்துக்குள்ளாக்கப்பட்டனர் வெளியீட்டு நிறுவனக்காரர்!

யுத்தத்தில் ஈடுபட்ட ராணுவத்தினருக்குபடிப்பதற்கு நூல்களை விநியோகிக்க வேண்டிய பொறுப்பு நூல்வெளியீட்டு நிறுவனங்களுக்கு வழக்கப்பட்டது! தேவனும் ராணுவீரர்களைகவரும்எழுத்தாளரானார், மணிபல்லவம் அப்போதைய இவரது மொழிபெயர்ப்புநூல்!

● ●

உரும்பிராய் இந்துக்கல்லூரி தேவனை விரும்பிஅழைத்தது.

வடபகுதியில் அப்போதிருந்த ஒரிரு கலவன் பாடசாலைகளில் இதுவுமொன்று

இதனால் அங்கு கல்விகற்பிக்கச் சென்றபோது பெரியவர்கள், தேவன் ஆசிரியராக இருந்தாலும், இளைஞனாக இருப்பதால் எச்சரிக்கை ஒன்றை விடுத்தார்கள்.

''கலவன் பாடசாலை! கவனம் என்ற அவர்கள் எச்சரிக்கையை அவர் புரிந்து கொண்டார். தேவனுக்கும் புதிய அனுபவம் தானே!

ஆனால்—

''எந்த வித்தியாசத்தையும் அப்போது நான் அங்கு காணவில்லை. மாணவர்களைப்போல மாணவிகளும் பழகினார்கள். நகைச்சுவைகளை ஏற்றுக் கொண்டார்கள்''! என்று கூறிய அவருக்கு, 'கலவன் பாடசாலை' என்றால் முன்பு பெரியவர்கள் எப்படிப்பயந்தார்கள் என்று சொல்லிச்சிரித்தார்.

### யாழ். இந்துவில்

உரும்பிராய் இந்துவிலிருந்து யாழ். இந்து ஆசைப்பிள்ளை, தேவனை அழைத்துக்கொண்டாரல்லவா?

''ஆங்கிலம், கணிதம் படிப்பிக்கப்போனவர், பௌதீகம், மோட்டார் பொறியியல், புவியியல் போன்ற சகல பாடங்களையும் மாணவர்களுக்குப் பயிற்றுவிக்க ஆரம்பித்தேன்'' என்று என்னிடம் கூறிய தேவன்—

யாழ். இந்துக்கல்லூரியில் நான் படிப்பித்த இருபத்தாறு ஆண்டுகாலத்தையும் என்றுமே மறக்கமுடியாது — எனக்கு அதிபர்களாக இருந்தவர்கள் ஒவ்வொருவரும் என்னை ஒவ்வொருவகையில் கவர்ந்தார்கள்! சக ஆசிரியர்களுடன் நான் பழகிய நினைவுகள், மாணவர்களுடன் பழகிய காலங்கள்—ஆசிரிய வாழ்வை மதிக்கிறேன்!'' இதயபூர்வ பேசினார்.

### தேவன் தேவன்

பரிசளிப்பு விழாவென்றால் என்ன, பள்ளிக்கூட கொண்டாட்டங்கள் எதுவாக இருந்தாலும்'தேவன் தேவன்' என்ற குரல்தான் அழைத்துக் கொண்டிருக்கும்!

ஒவ்வொன்றுக்கு ஒவ்வொருவர் பொறுப்பாக இருந்தாலும், எல்லாவற்றையும் இணைத்து முடித்து வைப்பவர் தேவனாகத்தான் இருக்கும்!

வருடா வருடம் ஒரு புதிய நாடகத்தை எழுதித் தயாரித்து மாணவர்களைக்கொண்டு மேடை ஏற்றுவார் தேவன்!

பள்ளிக்கூடச் சஞ்சிகைப் பொறுப்பு தேவனுடையது!

தேவன் இல்லாவிட்டால், எந்த அதிபர்களாலும், இப்படியான நிகழ்ச்சிகளையெல்லாம் யாழ். இந்துவில் நடத்த முடியுமா என்று யோசிக்குமளவுக்கு அவரின் பங்களிப்பு!

மாணவர்கள் மத்தியில் 'ஹீரோ வாகத் திகழ்ந்த ஒரு ஆசிரியர்' என்று தேவனைக் குறிப்பிடலாம்! தனது பேச்சாற்றலால் மாணவர்களைக் கவர்ந்தார்!

எந்த நேரமும் மாணவர் குழாம் அவரைச்சுற்றிநின்று. அவருடன் பேசிக்கொண்டிருப்பதை பள்ளிக்கூட காலை, மாலை, இடைவேளை நேரங்களில் காணலாம்.

### ஆசைப்பிள்ளைமீது தனி அன்பு

தன்னை இந்துக்கல்லூரியில் அணைத்துக்கொண்ட ஆசைப்பிள்ளைமீது தனி அன்பு வைத்திருக்கும் தேவன், தான பாடசாலையில் இருந்த காலத்தில் அதிபராக இருந்தவர்களின் நல்ல குண இயல்புகளை நினைவு கூர்ந்தார்.

செவிகட்புல சாதனங்கள் கேந்திர நிலையம் ஸ்தாபிக்கப்பட்டபோது உபகரணங்களை எவரும் பொறுப்பேற்க முன்வரவில்லை!

புத்தகப் பூச்சிகளாக இருந்து, சோதனை சித்திபெற்றதனால் பயன் என்ன? தேவன் தான் பொறுப்பேற்றார். தொழில் முன்னிலைப் பாடங்கள் புகுத்தப்பட்டபோது, தராதரப்பத்திரமில்லாத அவர், அப்பாடங்களைப் படிப்பித்தார்! மோட்டார் தராதரப்பத்திர பரீட்சைக்கு பிரதம பரீட்சகர் ஆனார்!

'ஸ்கோடா' என்ற நீட்டுக்கார் யாழ் இந்துக்குள் நுழைந்துகொண்டிருந்தது பலருக்கும் நினைவு இருக்கலாம். செக் நாட்டுக்கார் அது! இங்கு வைத்திருந்தவர் தேவன்!

### அதிபர் பதவி மோகம் இல்லை

''அதிபர் பதவி மோகம் எனக்கு என்றும் இருந்ததில்லை; பதவி உயர்வு கிடைத்தது பின்னர் மறுக்கப்பட்டது! இவற்றைப்பற்றியெல்லாம் நான் கவலைப்படவில்லை! ''என்றும் கூறும் தேவன்,'' இளைஞர்கள் மத்தியில் வாழ்வது காயகல்பம் போன்றது. நான் இவ் ஆசிரியத்தொழிலில் மிகவும் சந்தோஷமாக இருந்திருக்கிறேன் '' என்று சொல்கிறார்.

### திறமை ஒன்றா? இரண்டா?

தேவனிடம் நிறையத் திறமைகள் இருக்கின்றன.

ஒருவர் எவ்வளவு நேரம் பேசினாலும் சிறுதுண்டில் சில சொற்களை மட்டும் குறிப்பெடுத்து வைத்துக்கொண்டு மூலப் பேச்சில் ஒரு சிறு பிசகுமில்லாமல் வரிக்கு வரிமொழி பெயர்ப்பதில் தேவன் வல்லவர்! இது என்னை வெகுவாகக் கவர்ந்தது.

ஜயப்பிரகாஷ் நாராயண்

(8ம் பக்கம் பார்க்க)

## ரூ. 20 லட்சம் மான நஷ்ட வழக்கு:

# விளக்கமளிக்க பிரதிவாதிகளுக்கு அவகாசம்

(கொழும்பு)

'அத்த' பத்திரிகையின் ஆசிரியர், பிரசுரிப்பாளர், வெளியீட்டாளர் ஆகியோரிடம் 20 லட்சம் ரூபா மான நஷ்டம் கோரி பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசாவினுல் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் பிரதிவாதிகள் தங்கள் நிலேயை எழுத்துமூலமாக விளக்குவதற்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 26ம் திகதி வரை கொழும்பு மாவட்ட பதில் நீதிபதி திரு. விக்கிரமகுணரத்ஞவினுல் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

லங்கா ஜாதிகபெரமுன கூட்டத்தில் நிகழ்த்தப்பட்ட உரையொன்று தொடர்பாகவே பிரதமமந்திரி இவ்வழக்கைத்தாக்கல் செய்துள்ளார். [வெ]

## மங்கையர் கழக அபிவிருத்தித் திட்டவேலே

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை முதலிக்குளம் கோவிலடிப் பகுதி வறிய மக்களின் வாழ்க்கை வசதிகளே முன்னிட்டு, யாழ்ப்பாண மாவட்ட மங்கையர் கழகம் இப்பகுதியில் அபிவிருத்தித்திட்ட வேலேகளேச் செய்துவருகிறது.

நெதர்லாந்து உதவித்திட்டத்தில் மங்கையர் கழக அபிவிருத்தி உதவித்திட்ட வேலேகளேச் செய்துவருகிறது என்று இக்கழகத்தின் தலேவி திருமதி துரைசுவாமி தெரிவித்தார்.

சிறுவர் பாடசாலே, சன சமூக நிலேயம் போன்றவற்றை இங்கு அமைத்துக்கொடுத்துள்ள இக்கழகம், நெதர்லாந்து உதவியுடன் குடிநீர் விநியோகத்துக்கெனக் கிணறு ஒன்றையும் வெட்டிவருகிறது.

இக்கிணற்றிலிருந்து குழாய் நீர் விநியோகம் செய்வதற்கெனத் தண்ணீர் தாங்கி ஒன்றையும் இந்த மங்கையர் கழகம் அமைக்கவுள்ளது.

இந்த நீர்விநியோகத்துக்கான யந்திரம், மின் விநியோகம் போன்ற உதவிகளேயும் இக்கழகம் செய்யவுள்ளதாக கழகத் தலேவி திருமதி யோ. துரைசுவாமி தெரிவித்தார். (வண். நிரு.)

## ரயில் மோதி மரணம்

[சாவகச்சேரி]

அல்லாரையைச் சேர்ந்த வ. செல்லேயா அல்லது செல்லன் என்ற சீவல் தொழிலாளி (வயது 55) கொடிகாமத்தில் புகையிரம் மோதியதால் மரணமானுர்.

சாவகச்சேரித் திடீர் மரண விசாரணே அதிகாரி திரு. என். தர்மேந்திரன் ஸ்தலததுக்குச் சென்று விசாரணேயை மேற்கொண்டார் சாவகச்சேரிப் பொலிசைச் சேர்ந்த இராசிங்கம், வல்லிபுரநாதன் ஆகியோர் சாட்சிகளாக இறந்தவரின் மகன் கேதீஸ்வரன், சிறியதாயார் கண்மணி என்போரை ஆஜர் செய்தர.

சம்பவதினம் காலமானவர் கொடிகாமச் சந்தையிலிருந்து கச்சாய் வீதிப்புகையிரதக் கடவையை சைக்கிள் மூலம் கடக்கும் போது அனுராதபுரத்திலிருந்து வந்த சரக்கு ரயிலில் மோதியதாகவும் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலேக்குக் கொண்டு செல்லும் போதே அவர் இறந்துவிட்டதாகவும் காலமானவருக்குக் காது கேட்பது குறைவு என்றும் சாட்சிகள் மூலம் தெரிய வந்தது.

மரணவிசாரணே அதிகாரி விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார். (உ

### கேதீச்சரத்தில்

## இரு நினேவு மண்டபங்கள் 29-ம் திகதி திறப்பு விழா

[யாழ்ப்பாணம்]

திருக்கேதீஸ்வர ஆலயத்தில் மலேசியயாத்திரிகர் இல்லத்தில் சைவப்பெரியார் சு சிவபாத சுந்தரனுர் நினேவு மண்டபமும் சிவமணி சேர் கந்தையா வைத்தியநாதன் மண்டபமும் இம்மாதம் 29-ந் திகதி புதன் கிழமை திறந்துவைக்கப்படவுள்ளன.

இம்மண்டபங்களே முன்னுள் பரமேஸ்வராக்கல்லூரி அதிபர் திரு. மு, ஞானப்பிரகாசமும், திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபைத் தலேவர் திரு. இ. நமசிவாயமும் திறந்துவைப்பார்கள். திருக்கேதீச்சர மலேசியாக் கிளேத் தலேவர் திரு. ஆ. தம்பையா தலேமையில் இவ்வைபவம் நிகழும். [உ]

### இந்து நாகரீகம்

## முதன்முறை கலாநிதிப் பட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலேக்கழகத்தில் இந்துநாகரீகத்துறையில் முதன்முறையாக கலாநிதிப் பட்டத்தினே பிரம்மஸ்ரீ பத்மநாபக் குருக்கள், கோபால கிருஷ்ண ஐயருக்கு வழங்கப்பட்டது.

''சைவாகமங்கள் கூறும் சிவ வடிவங்கள்'' பற்றிய ஆய்வினே திறமாகச் செய்தமைக்காக இப்பட்டத்தினே அவர் பெற்ருர்.

இந்துநாகரீகம் ஒரு பாடமாக இலங்கையில் மட்டுமே போதிக்கப்படுகிறது. இப்பாடத்திலே சிலர் முதுகலேமாணிப்பட்டம் பெற்றுள்ளனர். ஆனல் இப்பாடத்தில் பெறப்பட்டுள்ள முதலாவது கலாநிதிப்பட்டம் இதுவே. வைதீக, சைவாகம மரபுகளிலே மிகுந்த தேர்ச்சியும், அனுபவமுமிக்கவரான பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்களின் மேற்பார்வையிலே இவ்வாய்வினே அவர் நன்கு செய்து முடித்துள்ளார். யாழ். பல்கலேக்கழகத்தில் இந்துநாகரீகத்துறை உதவி விரிவுரையாளராக அவர் இருந்து வருகின்ருர்.






## கூட்டுக்கமிட்டி

புதுடில்லி, செப். 25 இந்தியாவும் நேபாளமும் புதிய கைத்தொழில் துறைகளில் ஒத்துழைக்க கூட்டுக் கமிட்டியொன்றை அமைத்துள்ளன. (வெ)


**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு – சுபாஷினி
நெஞ்சத்தை கிள்ளாதே
(கலர்)

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 6-15, 9-30
சனி–ஞாயிறு 2-30
24—30 வரை
நிறம்மாருத பூக்கள்

**ராஜா** (யாழ். நகர்)
4 காட்சிகள்
பிரதாப்–ராதிகா
வசந்தத்தில் ஒரு வானவில்
(ஈஸ்ட்மன் கலர்)
1-10-82 முதல்
பாக்கியராஜ்– சரிதா
மௌனகீதங்கள்
(ஈஸ்ட்மன்கலர்)

**வின்ஸர்** (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
சந்திரசேகர்–சுபாஷினி
பாலைவனச்சோலை


# 20,000 ரூபாவுடன் தலைமறைவு:

# சந்தேகநபர் 20,000 ரூபா பிணையில் செல்ல அனுமதி!

(மாவிட்டபுரம்)

எரிபொருள் விற்பனை நிலையத்தில் கடமையாற்றி விட்டு அங்கிருந்த 20 ஆயிரம் ரூபா பணத்துடன் தலைமறைவானவர் கைதாகிமல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட சமயம் 20 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

காங்கேசன்துறையிலுள்ள தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் விற்பனவு நிலையத்தில் எரிபொருள் நிரப்புனராக கடமை புரிந்த சீனிவாசகம் சத்திவேலு என்பவர் மேற்படி நிலையத்திலிருந்து 18 ஆயிரம் ரூபா பணம், மற்றும் அரசாங்க ஆடர்கள் போன்றவற்றுடன் தலைமறைவாகியிருந்தார் எனப்புகார் செய்யப்பட்டிருந்தது. மொத்தம் 20 ஆயிரத்து 452 ரூபா என பொலிசாரால் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபர் குறித்து சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டு இவர் வெளிநாட்டுக்கு தப்பியோடாத வண்ணமும் பொலிசாரால் கண்காணிக்கப்பட்டு வந்தது.

சந்தேக நபர் மருதானைப் பகுதியில் நடமாடிய சமயம் அங்கு வைத்துக் கைதாகி காங்கேசன்துறைப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பொலிசார் இவரை மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்த சமயம் நீதிபதி திரு. சீ வி விக்னேஸ்வரன் இவரை 20 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணை அல்லது உறுதிப் பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டு விசாரணையை ஒத்தி வைத்தார். (க)

## விழிப்புக்குழு பொதுச்சபை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம்– கோப்பாய் பொலிஸ் பகுதியிலுள்ள பொலிஸ்– பொதுமக்கள் நட்புறவுச் சங்கங்கள் மற்றும் கண்காணிப்பு, விழிப்புக்குழுக்களின் பொதுச்சபைக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை சுன்னாகத்திலுள்ள சினிமாதியேட்டரில் நடைபெறவுள்ளது.

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு பொன் சுகுணேந்திரன் தலைமையில் நடைபெறவிருக்கும் இப்பொதுக்கூட்டத்தில், யாழ். உதவிப்பொலிஸ் அதிபர் ஜனாப் எம். எஸ் நிஸார் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுவார். (மா)

## அமிதாப்பச்...

(3–ம் பக்கத் தொடர்ச்சி)

கான ரசிகர்கள் மகிழ்ச்சியாரவாரஞ்செய்தனர்.

பெங்களூரில் நடந்த படப்பிடிப்பின் போது உடலின் உள்பகுதியில் காயமடைந்த அமிதாப்பச்சன் 2 மாத காலம் பம்பாய் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்ருர்.

அமிதாப்பச்சன் பூரண சுகமடைந்துள்ளதாகவும் சிறிது காலம் 'ஓய்வு' எடுத்தபின் மீண்டும் நடிக்கலாம் என்றும் சிகிச்சையளித்த டாக்டர்கள் தெரிவித்தனர். (க)

## இன்று கொள்கை விளக்க கூட்டம்

(யாழ்ப்பாணம்]

ஜனாதிபதி தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைகுறித்து இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நல்லூர் கல்யாணமண்டபத்தில் கொள்கை விளக்கக் கூட்டம் நடைபெறவுள்ளது.

கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் மாவட்ட செயலாளர் திரு. பொன். குமாரசுவாமி தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில் திரு. அ.வயித்திலிங்கம், திரு. எச் ஜி எஸ் ரத்தினவீர ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். (மா)


**ஓம்**
ஸ்ரீ ராம ஜெயம்
வண்ணை ஸ்ரீ வேஙகடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்
யாழ்ப்பாணம்

### வருடாந்த மகோற்சவம்

நிகழும் துந்துபி வருடம் புரட்டாசி 3–ந் திகதி
19-9-82 ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணிக்கு
கொடியேற்றம்
27-9-82 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு
சித்திரத்தேர் உற்சவம்
28-9-82 செவ்வாய்க்கிழமை பகல் 11 மணிக்கு
தீர்த்தோற்சவம்
29-9-82 மாலை 7 மணிக்கு
திருக்கல்யாண உற்சவம்
நடைபெறும்.

இங்ஙனம்
மேற்படி தேவஸ்தான
4467 ஆதீனகர்த்தாக்கள்.

**சாந்தி** (யாழ். நகர்)
DAILY 5 SHOWS
**'THE BODY'**
SEX — Strictly for Adults
Color —BRAND NEW PRINT
The Sex Educational film that should not be missed by every adult.

**வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வேலணை**

### வெற்றுச் சாக்கு விற்பனை

மேற்படி ப. நோ. கூ. சங்கத்தால் 2000 வரையிலான வெற்றுச்சாக்குகள் விற்பனைக்குண்டு. கொள்வனவு செய்ய விரும்புவோர் ரூபா 5/– கேள்விப் பத்திரப் பணமாகவும், ரூபா 250/– கேள்வி வைப்புப் பணமாகவும் கட்டி கேள்வி விண்ணப்பப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளலாம். தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் ரூபா 500/– ஐந்நூறு பிணைப் பணமாகக் கட்டுவதுடன் 3–10–82–ம் திகதி பகல் 12 மணிக்கு முன் முழு வெற்றுச் சாக்குகட்கும் உரியபணத்தை செலுத்திச் சாக்குகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

விண்ணப்பம் ஏற்கும் கடைசித் திகதி: 30–9–82.

தங்கள்
கூட்டுறவுச் சேவையிலுள்ள
இ. சோமசுந்தரம்,
பதில் பொதுமுகாமையாளர்,
4659

### Shift Supervisors

Need young Supervisors with mechanical knowledge and ability to control workers. Preference will be given to those who can speak all three languages.

### Mechanics

Require persons with knowledge of Motor Mechanism. Age between 18 to 25 years. Preference will be given to those with technical qualifications

Apply in own handwriting to :

P. O. Box No. 1199,
Colombo,
with details of full bio data, salary required and names of two Referees.

4593

**றீகல்** (யாழ். நகர்)
தினசரி 10–'0,2–30,6–15,9–30
ரஜனிகாந்த்-ரதி - ஜெய்சங்கர்
முரட்டுக்காளை (கலர்)

**வெலிங்டன்**
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஆயிரம்வாசல் இதயம்

**லிடோ** தினசரி 4 காட்சிகள்
[யாழ்ப்பாணம்]
சிவாஜி–கே.ஆர்.விஜயா
கிரகப்பிரவேசம்

**ராணி** (யாழ் நகர்)
தினசரி 10–30, 2–00, 6–00, 9–30.
ஜெமினி – சரோஜாதேவி – நாகேஷ்
பணமா பாசமா

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
10–30, 2–15, 4–45, 7–15, 9–30
WANG YU in
BLOOD OF THE DRAGON
(Scope—Color—Karate Film)

**ஸ்ரீதர்** (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-மஞ்சுளா-லதா
நேற்று இன்று நாளை
எமது அடுத்த வெளியீடு
நம் நாடு

### மீண்டும் மலிவு விற்பனை!

யாழ்ப்பாண மக்களின் அபிமானம் பெற்ற நிறுவனம்
★ மின்சார உபகரணங்கள் ★ பாடசாலை உபகரணங்கள்
★ வீட்டுப் பாவனைப் பொருட்கள் மற்றும் பரிசுப் பொருட்களுக்கு
கெமிவிக்ஸ் - பைன்டர்கம் விநியோகஸ்தர்

**அம்பலவாணர் அன் சன்ஸ்**

(இலங்கை தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன உத்தரவுபெற்ற வியாபாரிகள், மின்சார ஒப்பந்தகாரர்) கடைத்தெரு பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக
196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2491

தலைமையகம் :
பேர்ள்லெட்ஸ் அம்பலவாணர் & சன்ஸ்
78, மலிபன் வீதி, கொழும்பு - 11
தொலைபேசி: 24821 — 28244

லெட்சுமி பவான்
97, ஒல்கொட் மாவத்தை
கொழும்பு–11
போன்: 24821

# பட்டதாரிகளை உருவாக்கும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதி விருது பெற்ற கலாசூரி திரு. என். கே. பத்மநாதன் குழுவினர் நாதஸ்வரம் வாசித்தனர்.

வேந்தரும் உபவேந்தரும் குத்துவிளக்கேற்றி வைத்தனர்.

பேராசிரியர் எஸ். வி. சிட்டிபாபு தொடர்ந்து தமது பேருரையில் கூறியதாவது;

''நம்முடைய பழம் பெருமைகளையும் பாரம்பரியங்களையும் உயர்ந்த கோட்பாடுகளையும் நிலைத்த மதிப்புக்களையும் மேம்படுத்திக்கொள்வதில் நம்மிருநாடுகளும் இணைந்தே செயற்பட்டு வந்துள்ளன என்ற உணர்வு இந்த நல்ல வேளையில் என்னை மெய்சிலிர்க்க வைக்கிறது.

## விபுலானந்தர் தொண்டு

''இந்த வாய்ப்பான நேரத்தில் சுவாமி விபுலாநந்த அடிகள் அவர்களின் அளப்பரிய தொண்டினை நான் நினைவுகூர விழைகிறேன். பல ஆண்டுகட்கு முன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவராக இருந்து யாழ் நூல் இயற்றித் தமிழ் சைவ மறுமலர்ச்சிக்குத் தம்மால் இயன்ற பணியாற்றிய பெருமைக்குரியவர் அடிகளார் அவர்கள். இப்பெரியாருக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பட்டுள்ள நன்றிக்கடன் தீர்க்க முடியாததொன்றாகும். எங்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அமைந்துள்ள எல்லையில்லா ஆனந்த நடம்புரியும் நடராசப் பெருமானின் இடமாகிய தில்லையோடு வரலாற்றுத் தொடர்புகொண்ட பெருஞ் சிறப்புடைய ஆறுமுக நாவலர் பெருமான் அவர்களை நானிங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

## யாழ்ப்பாணத்தின் பெருமை

''யாழ்ப்பாணம் என்ற பெயர் குன்றாப் புகழுடைய சிறந்த சான்றோர்களை என் மனக்கண் முன் கொண்டுவந்து நிறுத்துகின்றது. இலங்கைப் பல்கலைக் கழக இயக்கத் தந்தையும் பல்துறை அறிவு சான்ற தேசிய வாதியுமான சேர். பொன்னம்பலம் அருணாசலம் அவர்களும் பண்பட்ட நோக்கங்களோடு கூடிய சிறந்த கல்வியறிஞரும் மிகவுயர்ந்த வழக்கறிஞரும் திறமையான அரசியலவாதியுமான சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களும் இந்துக் கலைப் பண்பாட்டுக்கு ஒப்பற்ற விளக்கம் தந்த உலகப் புகழ் பெற்ற டாக்டர் ஆனந்த குமாரசாமி அவர்களும் இவர்களைப் போன்ற மற்ற சிறப்பாளர்களும் பொதுவாக இலங்கை வரலாற்றிலும் சிறப்பாக யாழ்பபாண வரலாற்றிலும் பொனனெழுத்துக்களால பொறிக்கத்தக்க மாண்பினையுடையவர்கள்.

''இந்த யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலிருந்து இந்த ஆண்டு பல பட்டங்களைப் பெறும் பட்டதாரிகளை உளமாரப் பாராட்டி வாழ்த்து கிறேன். நாம் விரும்புகிறோமோ இல்லையோ பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா என்பது ஒரு சடங்காகவே நிகழ்த்தப்பட்டுவருகின்றது. பட்டமளிப்பு விழாப்பேருரையாளரும், பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறும் பட்டதாரிகளுக்கு ஒரு உயர்மட்டத்திலிருந்து அறிவு நலத்தை யொட்டிப் பேசவேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறார்.

## பட்டமளிப்பு விழா ஒரு வாய்ப்பு

அடிப்படையில ஒருபல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா வென்பது பல்கலைக்கழக வளாகத்திலே பிரச்னைகளும் சவால்களுங்கூடிய கல்லூரி வாழ்க்கையை மதிப்பீடு செய்து கொள்ளவும் புதுமைப்படுத்திக்கொள்ளவும் கிடைக்கப்பெறும் ஒரு வாய்ப்பாகும். மேலும் அறிவு மற்றும் ஆன்மீகமும் அடங்கிய உலகிலே இக்காலத் தலைமுறையினரை அவர்கள் மேற்கொண்ட கடந்தகால முயற்சிகளுடனும் இனி ஏற்கப்போகின்ற வருங்காலத் துணிவுகளுடனும் இது பிணைக்கக்கூடியது. எல்லாக் காலமும் இன்று, நேற்று. நாளையென்ற மூன்று பகுதிகளுள் எப்படி அடங்குமென்பதை நாம் எல்லோரும் அறிவோம். நடைமுறைப் போக்கில் இன்று என்பது நேற்றைய பயனகவும், நாளைக்குக் காரணமாகவும் உள்ளது. நேற்று, இன்று, நாளையென்பவற்றின் பொருளார்ந்த சமநிலையைத் தராதரத்தகுதிகளை நன்கு மனத்தாற் புரிந்துகொள்வது வாழ்க்கை நிலைப்பேற்றிற்கென இல்லாவிட்டாலும்கூட, நம் வாழ்க்கை நலத்திற்கும் மகிழ்ச்சிக்கும் அடிப்படையாகும். ஆனல் கடந்தகாலத்தை நாம் மறந்துவிட்டு இக்காலத்திலேயே மூழ்கி நாளைய நிலையைப்பற்றி நினைக்க நேரமில்லாமற் போகலாம். அது காரணமாக வாழ்க்கை நிலையோடு தொடர்பு வைத்துக் கொள்ளத்துணைபுரியும் வழிக்குறியீடுகளைக் காணமற் போகவும் நேரிடும்.''

இப்பட்டமளிப்பு விழாவில் யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு.சு. நடராசா, தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவரும், நல்லூர் எம் பி யுமான திரு எம்.சிவசிதம்பரம், யாழ் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, முன்னுள் அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னண்டோ, மற்றும் பல அரசாங்க அதிகாரிகள் முன்வரிசையில் இருந்தனர்.

மேடையில் வேந்தர், உபவேந்தர், யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத் தலைவர் பேராசிரியர் க. கைலாசபதி உட்பட மற்றும் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் இருந்தனர்.

யாழ். பல்கலைக் கழக உபவேந்தர் 463 மாணவர்களுக்கும் பட்டங்கள் வழங்கினர்.

(மா)

# யாழ். இந்துவில்...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

இங்கு வந்தபோது அவரது பேச்சை தமிழில் மொழி பெயர்த்து அவரது பாராட்டையே பெற்றார்.

திரு டட்லி சேனநாயக்கா பிரதமராக இருந்த காலத்தில் ஒரு தடவை யாழ்ப்பாணத்துக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு இங்கு வந்தபோது அவர் கலந்து கொண்ட கூட்டங்களில் அவர் பேசிய ஆங்கிலப் பேச்சுக்களை மொழி பெயர்த்தார் தேவன்!

''ஒருவர் பேசி முடிந்ததும் அவர் பேச்சில் ஒரு வரிதானும் பிசகாமல் எப்படி மொழி பெயர்ப்பை வழங்குகிறீர்கள்'' என்று கேட்டேன்.

''அவர் பேச்சில் முக்கியமானதோ முக்கியமில்லாதோ இரண்டு மூன்று சொற்களைக் குறித்து வைக்கிறேன். அதனைச்சுற்றி என் நினைவு போகிறது! அவ்வளவுதான்!'' என்றார்.

பட்டிமன்றம் ஒன்றும் தேவனின் மனதில் இன்னும் நினைவில் நிற்கிறது. அரசியல் தலைவர்கள் சிலரும் கண்களுக்குள் வந்து போகிறார்கள்.

அரங்கேற்றமோ, நடன நிகழ்ச்சியோ, நாடகமோ, கூட்டங்களோ, விளையாட்டுப் போட்டிகளோ, தேவன் அங்கு இருப்பார் என்ற காலமும் இருந்தது.

எந்த விஷயத்தையும் வெகு சுலபமாகக கிரகிக்கும் தன்மை தேவனிடமிருக்கிறது.

அரசாங்க பாடசாலை சங்கீத ஆசிரியையாக இருந்த அவரது மனைவி பரமேஸ்வரி ஓய்வு பெற்று குடும்பத்தைக் கவனிக்கிறார் மூன்று ஆண் இரண்டு பெண் குழந்தைகள் இவர்களுக்கு! 'தமிழ் சிறீ' நினைவாக தன் குழந்தைகள் ஐவரின் பெயர் முடிவுகளையும் 'சிறி' என்று முடித்திருக்கிறார். 1958ல் தான் முதல் குழந்தை பிறந்தது – அப்போது தான் தமிழ் சிறி போராட்டமும் நடந்தது.

''ஆசிரியத்தொழில் எனக்கு என்றுமே அலுப்புத்தட்டவில்லை'' என்று சொல்லும் தேவன் மாஸ்டர் 38 ஆண்டு காலம் சேவையாற்றி தனது 58வது வயதில் ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

தேவனுடன் பழகிய எவருக்குமே அவர் மீது அலுப்புத் தட்டியது கிடையாது! அதனல்தான் அவரைத் தெரிந்தவர்கள் எல்லாரும் அவரிடம் தனிமதிப்பு வைத்திருக்கிறார்கள்!

ஆசிரிய உலகமும், மாணவர் உலகமும் இருக்கும்வரை தேவன் மாஸ்டரும் நிலைத்து நிற்பார்!

# சைவ மாநாடு இன்றைய நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடக்கும் அகில இலங்கைச் சைவ மகாநாட்டின் இறுதிநாளான இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் நிகழ்ச்சிகள்:-

காலை–தத்துவ அரங்கினுக்கு யாழ் பல்கலைக் கழக இந்து நாகரீகத்துறைத் தலைவர் பேராசிரியர் கா கைலாசநாதக் குருக்கள் தலைமை தாங்குவார். இதில் பிரம்மஸ்ரீ ப. சர்வேஸ்வர ஐயர், பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய ஐயர், கலாநிதி ப.கோபாலகிருஷ்ணன் ஆகியோர் உரையாற்றுவார்கள்.

மாலை–திரு. ச. செல்வராசா தலைமையில் நடைபெறும் நிகழ்ச்சியில்; 4.10 – 4.30 திருமுறை ஓதுதல் வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள், 4.30—5.30 தலைமைப்பேருரை 5.30 — 6.00 பண்ணிசைப் போட்டியில் பரிசு பெற்றவர்கள், 6.00—6.15 சைவசமய பாடப் பரீட்சை, பண்ணிசைப் போட்டி என்பனவற்றில் அகில இலங்கைப் பரிசு பெறுபவர்களுக்கு பரிசு வழங்கல்.

பரிசுவழங்குபவர் திரு. பொ. ச. குமாரசாமி அதிபர், யாழ். இந்துக் கல்லூரி 6.15—7.00 விரிவுரை பண்டிதை திருமதி ச. அமிர்தாம்பிகை ''தற்கால சைவமும்—சைவ சமயமும்'' 7.00—7.40 விரிவுரை திரு.க. சிவராமலிங்கம் (யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர்) ''சேக்கிழார் செந்தமிழ்'' 8-00 ''பண்ணிசை'' (இணுவில் கந்தசாமி கோவில் இளந் தொண்டர் சபைப் பண்ணிசைப் போட்டிக்கு தங்கப்பதக்கப் பரிசு வழங்கியவர் மலேசியா திரு. S.துரைராஜசிங்கம் ஆனந்தக் குமாரசாமி ஞாபகார்த்தநிதி.

## கூட்டங்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாலயம், சுன்னுகம் சந்தை, காங்கேசன்துறை, அச்சுவேலி பஸ்நிலையம், பருத்தித்துறை கடற்கரை, சாவகச்சேரிசந்தை கிளிநொச்சி சந்தை ஆகிய இடங்களிலும் ஹெலிகொப்டரில் சென்று உரைநிகழ்த்துவார்.

ஹெலிகொப்டர் இறங்கும் இடங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் இம்மகாநாட்டில் ஆராயப்பட்டது.

பலாலி இராணுவ முகாமில் இம்மகாநாடுநடைபெற்றது.

(மா)

## முற்போக்கு...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

களால் அமோக வெற்றிபெற்றதன்மூலம் இவர் சுதந்திர இலங்கையின் பிரதமராக இருந்தார்.

இவரது ஆட்சிக்காலத்தில் பல தனியார் உடமைகள் தேசியமயமாக்கப்பட்டன. பஸ் சேவையும், துறைமுகச் சேவையும் தேசியமயமாக்சப் பட்டன. நெற்காப்புறுதிச் சட்டமும், பயிர்க்காப்புறுதிச்சட்டமும் நடைமுறைக்கு வந்தன.

திரு. பண்டாரநாயக்காவின் நினைவுதினம் இன்று ஆகும்.

## நாளை பெருமாள் கோவில் சித்திரத் தேர்

[யாழ்ப்பாணம்]

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான சித்திரத்தேர் உற்சவம் நாளை திங்கட்கிழமை நடைபெறும். [இம்மாதம் 28ந்திகதி தீர்த்தோற்சவம் நடைபெறும்.

[க]

## ஸ்தாபக தினம்

(சுழிபுரம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்பப் பிரிவின் ஸ்தாபகதினம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்டசபை செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையாவும் பாரியாரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(க)


## லொறிகள் விற்பனைக்கு

நல்லநிலையிலுள்ள லொறிகள் வான்கள் விற்பனைக்குண்டு

24 ஸ்ரீ 306 மொறிஸ் லொறி
22 ஸ்ரீ 681 மொறிஸ் லொறி
27 ஸ்ரீ 3994 இசுசு லொறி
27 ஸ்ரீ 533 இசுசு வான் (ELF)
24 ஸ்ரீ 5466 பென்ஸ் லெறி
27 ஸ்ரீ 290 இசுசு வான் (ELF)

வாகனங்களை காரியாலய நேரங்களில் பார்வையிடலாம்.

மகாராஜா நிதி நிறுவனம்
122, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24126

லேத் இயக்குநர்களுக்கும் பயிற்சியாளர்களுக்கும்
(LATHEMAN and TRAINEE)

## வெற்றிடங்கள்

மூன்று வருடத்தற்கு மேற்பட்ட அனுபவமுள்ள லேத் இயக்குநரும், தொழில் நுட்பக் கல்லூரியில் Machining Course சித்தியடைந்தவராக அல்லது வேறு இடங்களில் பயிற்சி பெற்றுள்ளவர்களாக இருப்பவர்கள் லேத்தில் பயிற்சி பெறுவதற்கும் (Trainee) தேவை. நேரில் வரவும்.

சேவி கிளாஸ் & மெட்டல் வேக்ஸ்
நீர்வேலி 4597

கைத்தொழிலாளர்கள், வர்த்தகர்கள், ஒப்பந்தகாரர்கள், தமது தொழிலை, விருத்திசெய்வதற்கு-----

## கடன் வசதி

மகாராஜா நிதிநிறுவனம், யாழ்குடாநாட்டில் கைத்தொழில் முயற்சிகளுக்கும், வர்த்தகதுறைகளை விருத்திசெய்வதற்கும், எதுவித தாமதமுமின்றி, கடன்வசதி வழங்க முன்வந்துள்ளது. கடன் வசதி பெறவிரும்புவோர் தமது தொழில் முயற்சிகள் குறித்து எம்முடன் கலந்தாலோசித்து பணவசதி பெறலாம்.

மகாராஜா நிதி நிறுவனம்
122, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன்: 24126


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26-ம திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under numbre Q.B. 100236/81. Eelanaadu - P. O. Box: 49 Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.